இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 24-08-2024

# அவரே மொழி! அவரே விழி!

**அவரே மொழிக்கு உடமை ஆனவர்!**
**அவரே இனத்துக்கு உடமை ஆனவர்!**
**அவரே நாட்டுக்கு உடமை ஆனவர்!**

**அவர்தம் எழுத்துக்களை நாட்டுக்கே உரிமையாக்கி இருக்கிறார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'எல்லார்க்கும் எல்லாம்' என்பதே அவர்தம் கொள்கையாம். கலைஞர்தம் எழுத்துக்களையும் எல்லார்க்கும் ஆனதாக ஆக்கி இருக்கிறார்.**

தலைவர் கலைஞருக்கு தனி வாழ்க்கை, பொது வாழ்க்கை எனப் பிரித்துப் பார்க்க முடியாதபடி பிணைந்த வாழ்க்கையே அமைந்தது. அப்படியே அமைத்துக் கொண்டார். வாழ்நாள் முழுக்கவே பொதுமை வாழ்க்கைதான் கலைஞருடையது!

**"மூக்கினிலே மூச்சுப் போகும் வரையினிலே**
**முத்தமிழுக்குத் தொண்டு செய்வீர்!**
**போனபின்னும் புகழாலே தமிழ் காப்பீர்!"**

- என்றவர் கலைஞர். எழுதியபடி நின்றவர் கலைஞர். இதோ அவரது எழுத்துக்களை - நூல்களை நாட்டுடமை ஆக்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**'உரிமைத் தொகை ஏதுமின்றி'** என்ற அறிவிப்பு பொதுமைப் பண்பின் அடையாளமாகவே அமைந்திருக்கிறது. 'போனபின்னும் புகழாலே தமிழ் காப்பீர்' என்ற சொல்லுக்கு இலக்கணமாக அமைந்துவிட்டது, மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு.

"செங்கோல் பறிக்கப்படினும் சிறிதும் கவலையில்லை - என் கை எழுதுகோலை எவரும் பறிக்க முடியாது" - என்று எழுதுகோல் தாங்கியே இருந்தார் கலைஞர். எத்தனை வயதில் எழுதத் தொடங்கினார் என்பது கண்டுபிடிக்கப்படாத செய்தி. ஆனால் இறுதி வரை எழுதினார். எழுத முடியாத இறுதி நிலையிலும் 'தமிழ்' என்று எழுதினார். 'அண்ணா' என்று எழுதினார்.

ஜெயலலிதா ஆட்சியில் கொடூரமான முறையில் கலைஞர் கைது செய்யப்பட்டார். கையை முறுக்கி இழுத்துச் சென்றது ஜெ.போலீஸ். சிறையில் இருந்து வெளியில் வந்ததும் சட்டையைக் கழற்றி ஊடகங்களின் முன்னால் காட்டினார் கலைஞர். 'ரத்தக் கட்டு அதிகம் ஆகிவிட்டது. வலிக்கிறது. என்னால் எழுத முடியவில்லை' என்று சொன்னவர் கலைஞர்.

'பேனாவை என்னிடம் இருந்து பறித்தால் செத்துடுவேன்யா' என்று சொன்னவர் கலைஞர். அந்த வகையில் அவருக்கு ஆறாவது விரலாக - மூன்றாவது கையாக - இருந்தது பேனா!

**"ஏதுமறி யாத்தமிழர் தூய வாழ்வை எனக்குப் பின் சீர்படுத்தும் மறவன் நீதான்!" - என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணாவால் போற்றப்பட்டவர் கலைஞர். அவர் மறைந்தபோது தீட்டிய கவிதாஞ்சலி, இன்று கேட்டாலும் கண்ணீரருவியை உருவாக்கும். தந்தை பெரியாரையே உருக வைத்த கவிதை அது.**

**"அண்ணாவின் மறைவுக்குப்பின் ரேடியோவில் அண்ணாவைப் பற்றி அவர் பாடிய கவிதையைக் கேட்ட பொழுதுதான் அவர் எவ்வளவு பெரிய புலவராக வளர்ந்திருக்கிறார் என்று என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. உடனே டெலிபோனில் கூப்பிட்டு, 'ஐயா, நீங்கள் இவ்வளவு பெரிய புலவர் என்பதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்' என்று பாராட்டினேன். இவ்வளவு நெருங்கிப் பழகிய என்னாலேயே அவருடைய திறமைகளை எல்லாம் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அப்படி எந்தத் துறையிலும் பிரகாசமாக விளங்குகிறார் கலைஞர் கருணாநிதி" - என்று சொன்னவர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்.**

அந்தக் காலத்தில் புகழ்பெற்ற பத்திரிக்கையாளர்களில் ஒருவர் நாரண துரைக்கண்ணன். அவர் சொன்னார்:

" கலைஞர் இன்றுள்ள உன்னத நிலைக்கு உயர்ந்திருக்கிறார் என்றால், சதா படிப்பு, பேச்சு, எழுத்து, உழைப்பு, ஊக்கம் தான் காரணம். உணவு, உறக்க நேரந் தவிர கலைஞர் எப்போதும் எதையாவது படித்துக் கொண்டே இருப்பார். எழுதிக் கொண்டே இருப்பார். சிந்தனை செய்து கொண்டே இருப்பார். பாவேந்தர் பாடல்கள் முழுவதும் கலைஞருக்கு மனப்பாடம். நாடக, சினிமா வசன வளத்துக்குக் காரணம், அவருக்கு இளமைதொட்டு சேர்த்து வைத்த சொல்லாட்சியும், பொருட்செறிவும் கற்பனை வளமும்தான் காரணம்.

முதலமைச்சர் ஆனதும் கலை - இலக்கியத்தைக் கைவிட்டு விடுவாரோ என்று நான் கருதியதுண்டு. ஆனால் அவர் பத்திரிக்கைகளுக்கு எழுதுவதையும், படைப்பிலக்கியம் ஆக்குவதையும் விடவே இல்லை. முன்னைவிட மிகுதியாக எழுதுகிறார். நூல்களை ஆக்குகிறார். 'எழுதுவதை நிறுத்திவிடாதீர்கள், இலக்கியத்தை மறந்துவிடாதீர்கள்' என்று நான் சொல்வேன். 'எந்த நிலையிலும் நான் எழுதுவதை விடமாட்டேன். உறுதியாக நம்புங்கள்' என்று சொல்வார். அப்படிச் சொன்னபடியே, இல்லத்தில் இருக்கும்போதும் அலுவலகத்தில் இருக்கும் போதும் மட்டுமல்லாமல் வெளியே கார், ரயில் பயணங்களின் போதும் எழுதிக் கொண்டேயிருப்பார் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் சொல்லக் கேட்டு நான் மகிழ்ந்திருக்கிறேன்" என்று சொன்னாரென்றால், அவர்தாம் கலைஞர். அருந்தமிழ்ச் செல்வர்.

அரசியலில் இருந்த இலக்கிய ஆர்வலர் அல்ல கலைஞர். அரசியலில் செய்த அதே ஆட்சியை இலக்கிய உலகத்திலும் செய்தவர் கலைஞர். அவரை வாசித்து அவரைப் போல எழுதக் கிளம்பியவர்கள், பேசக் கிளம்பியவர்கள் அதிகம். அவரைப் போல நடு உச்சி எடுத்துக் கொண்டோரும், கரகர குரலை வரவைத்துக் கொண்டோரும் அதிகம்.

திராவிட மொழிநூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் சொன்னார்:
**"கலைஞரின் 'ரோமாபுரிப் பாண்டியன்' நூலைப் படித்தபோது அவர் பிறப்பிலேயே இதற்குரிய திறன் அமைந்தவர்கள் என்று நினைக்கும்படியாக இருக்கின்றது."** என்றார்.

மூப்பில்லாத் தமிழ் தந்த மு.வ. சொன்னார்:

**"தமிழகத்தின் பெருமையைச் சங்க காலம் போல மீண்டும் உலகம் போற்றக் கூடிய அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற கனவை நனவாக்க விடாமுயற்சியை மேற்கொண்டுள்ள சிறந்த அறிஞர் கலைஞர். தமிழ் அரசர்களான நலங்கிள்ளி, நெடுங்கிள்ளிக்குப் பின் புலவராகவும், அரசராகவும் வாழ்பவர் கலைஞர் ஒருவர்தான். தமிழறிஞர்களை, புலவர்களை வாழ்விக்கும் புரவலராக இருந்து பாதுகாத்து வருபவர் கலைஞர்"** என்றார்.

பாவாணரும், மு.வ.வும் தமிழ் ஆய்வுலகப் பரப்பில் விரிந்து பரந்த அறிவுத்திறனுக்கு உரிமை உடையவர்கள். அவர்களே வியந்தார்கள் கலைஞரின் தமிழைப் பார்த்து, இலக்கியத்தைப் பார்த்து, எழுத்தைப் பார்த்து!

ஆனால் இவை அனைத்தையும் 'அவையடக்கத்துடன்' தான் எழுதினார் கலைஞர்!

**"என் கவிதை யாப்பின்றிப் போனாலும் போகட்டும் - நம் நாடு மொழி மானம் உணர்வெல்லாம் காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை கொண்டோன்!"** - என்று சொல்லிக் கொண்டாலும் கவிதை வளமும் கற்பனைத் திறனும் சொல்லாளுமையும், எழுத்து வன்மையும் கொண்டு எழுதித் தள்ளினார் கலைஞர். வாசித்தது தமிழ்நாடு. வாசித்துக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு. தன்னையே உடமையாக்கிக் கொண்டவரின் தமிழ், இன்று நாட்டுடமை ஆக்கப்பட்டுள்ளது. புகழால் தமிழ் காப்பார் கலைஞர்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.8.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ்.அழகிரி அவர்கள் சந்தித்து, தனது மகன் திருமண வரவேற்பு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் கே. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் பொன் கிருஷ்ணமூர்த்தி, மாநில செயலாளர்கள் தமிழ்வாணன், ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூல்கள் நாட்டுடைமை!

# வீட்டுக்கொரு சூரியன் விளக்கேற்ற வந்தது!

## முதல்வருக்கு - கவிப்பேரரசு வைரமுத்து நன்றி!

தமிழ்நாட்டரசு
கலைஞர் படைப்புகளை
நாட்டுடைமை செய்திருப்பதை
வாழ்த்துகிறேன்; வரவேற்கிறேன்

தமிழையும் தமிழர்களையும்
மீட்டெடுக்கும் போராட்டத்தின்
ஒருபகுதிதான் அவரது எழுத்து

தன் உயிரையும் உதிரத்தையும்
ஊற்றிவைத்த கொள்கலன்தான்
அவரெழுத்து

அது உலகுக்கே
பொதுவுடைமை ஆவது
வீட்டுக்கொரு சூரியன்
விளக்கேற்ற வந்தது
போன்றதாகும்



இளைஞர்கள்
மொழிச் செப்பமுறவும்
கொள்கைத் திட்பம்பெறவும்
கலைஞர் எழுத்துக்குள் பயணிக்க
இது ஒரு நூற்றாண்டு வாய்ப்பு
மாண்புமிகு முதல்வர்
மு.க.ஸ்டாலின்
அவர்களுக்கு நன்றி

ஒரு ரூபாயும்
பெற்றுக் கொள்ளாமல்
கலைஞர் தமிழை நாட்டுக்கே
காணிக்கை செய்திருக்கும்
கலைஞர் குடும்பத்திற்கு
என் சிறப்பு நன்றி

கலைஞர் வாழ்வார்
என்பது தெரியும்

இனி நீள்வார்

**கவிப்பேரரசு வைரமுத்து**



## சென்னை கலைவாணர் அரங்கில் - இன்று எழில்மிகு விழா:

# அமைச்சர் எ.வ.வேலு எழுதிய "கலைஞர் எனும் தாய்" நூல்! முதல்வர் மு.க.ஸ்டாலின் - தலைமையேற்று வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்!

## முதல் நூலை - சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பெறுகிறார்! உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

**சென்னை, ஆக. 24- அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் எழுதியுள்ள 'கலைஞர் எனும் தாய்' எனும் நூலினை, இன்று (24.8.2024) சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெறும் எழில்மிகு விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிடுகிறார்.**

**நூலின் முதற்படியை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்.**

இவ்வினிய விழா பற்றிய விபரம் வருமாறு:-

முத்தமிழறிஞர் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் குறித்து அமைச்சர் எ.வ.வேலு எழுதியுள்ள "கலைஞர் எனும் தாய்" எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று (24.8.2024 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நூலை வெளியிட்டுச் சிறப்புரை யாற்றுகிறார்.

முதல் நூலை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பெறுகிறார்.




இந்நூல் குறித்து - குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், 'இந்து' குழும நிறுவனர் 'இந்து' என்.ராம் ஆகியோர் ஆய்வுரையாற்றுகின்றனர்.

விழாவில், நூல் ஆசிரியர் அமைச்சர் எ.வ.வேலு ஏற்புரை யாற்றுகிறார்.

சீதை பதிப்பகம் கௌரா இராசசேகர் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்விழா குறித்து, நூலின் ஆசிரியர் - அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், "என் நெஞ்செல்லாம் நிறைந்திருக்கும் அன்புத் தலைவர் - அருமை அண்ணன் - முத்தமிழறிஞர் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் குறித்து நான் எழுதிய 'கலைஞர் எனும் தாய்' என்னும் நூலினை - திராவிட மாடல் நாயகர் - இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர் - இரண்டாம் கலைஞராய் இன்று உயர்ந்து நிற்கும் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று வெளியிடவும் - சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் முதல் நூலைப் பெற்றுக் கொள்ளவும் இசைந்துள்ளார்கள்.

நெஞ்சுக்கு நெருக்கமான இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்."

என்று குறிப்பிட்டு, அனைவரும் விழாவில் பங்கேற்க அன்பழைப்பு விடுத்துள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி, வாலாஜா ஊராட்சி ஒன்றியம், முகுந்தராயபுரம் ஊராட்சி, அக்ராவரம், படவேட்டம்மன் கோயில் அருகில். திரு.வி.க. அரசு நிதியுதவி பள்ளியில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில் நலத்திட்ட உதவிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் இணைந்து வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி.கிரண் ஸ்ருதி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி. ஒன்றியக் குழுதலைவர் வெங்கட்ரமணன், முகுந்தராயபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.கே.முருகன், ஒன்றிய குழு துணை தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் செல்வம், ஒன்றிய குழு உறுப்பினர் ராமச்சந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் கோகுல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.